வாகனம் ஓட்டுதல் (Driving)

வாகனம் ஓட்டும் பணியை தொடங்கும் முன் இந்த சரிபார்ப்பை பூர்த்தி செய்ய வேண்டும்.

வேலையைத் தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும்	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **பயண ஆபத்துகளை சமாளிக்க தேவையான திட்டம் உள்ளது.**	• பயண மேலாண்மைத் திட்டத்தில் (Journey Management Plan) பின்வரும் விவரங்கள் உள்ளன, மேலும் ஓட்டுநர் அவற்றை அறிந்துள்ளார்: – செல்ல வேண்டிய இடம் (Destination) – பயன்படுத்த வேண்டிய பாதை (Route) – உள்ளூர் போக்குவரத்து நிலைமை (Traffic) – வானிலை மற்றும் சாலை நிலைமை (Weather & Road Conditions) – அவசரகால தொடர்பு எண்கள் (Emergency Contacts) • ஓட்டுநரிடம் தேவையான ஓட்டுநர் உரிமம் உள்ளது மற்றும் அந்த பகுதியில் இந்த வாகனத்தை ஓட்ட அனுமதி பெற்றுள்ளார் • ஓட்டுநர், பயணத்தின் போது ஓய்வு எடுக்க தேவையான நேரத்தை திட்டமிட்டுள்ளார். • வாகனத்தில் கண்காணிப்பு அமைப்பு இருந்தால், பயணம் முழுவதும் அது செயல்பாட்டில் இருக்க வேண்டும்.		
2 **ஓட்டுநர் நல்ல உடல்நிலையில் இருந்து, போதுமான ஓய்வு எடுத்து, கவனமாக வாகனம் ஓட்டத் தயாராக உள்ளார்.**	• ஓட்டுநர்: – போதுமான ஓய்வு எடுத்துள்ளார். – பயணத்தை மேற்கொள்ள உடல்நலத்துடன் மற்றும் தகுதியுடன் உள்ளார். – வாகனம் ஓட்டும் திறனை பாதிக்கக்கூடிய மது, போதைப்பொருள் அல்லது மருந்துகளின் தாக்கத்தில் இல்லை. • தனிப்பட்ட சோர்வை (Fatigue) கட்டுப்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அவற்றில்: – அதிகபட்ச வாகனம் ஓட்டும் நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. – வாகனம் ஓட்டுவதற்கு முன் குறைந்தபட்ச ஓய்வு நேரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. – தேவைப்பட்டால், பயணத்தின் போது ஓய்வு இடைவேளைகள் திட்டமிடப்பட்டுள்ளன.		
3 **ஓட்டுநர் , உள்ளூர் சாலை விதிமுறைகள் மற்றும் வாகன ஓட்டும் விதிகளை நன்கு அறிந்துள்ளார்.**	• ஓட்டுநர், வேக வரம்புகள் (Speed Limits), சாலை அடையாளங்கள் (Road Signs) மற்றும் பொதுவான தொடர்பு முறைகள் (எ.கா., பயன்படுத்த வேண்டிய வானொலி சேனல் (Radio Channel)) குறித்து அறிந்துள்ளார்.		
4 **ஓட்டுநர் (Driver), பயணத்தின் போது எதிர்பார்க்கப்படும் சாலை ஆபத்துகள் மற்றும் வானிலை நிலைமைகள் குறித்து அறிந்துள்ளார்.**	• ஓட்டுநர், வானிலை (மழை, பனி, வெள்ளம்), போக்குவரத்து நிலைமை மற்றும் சாலை நிலைமைகள் (தார் சாலை, ஜல்லி சாலை, சாலைப் பணிகள்) ஆகியவற்றை முன்கூட்டியே சரிபார்த்துள்ளார்.		
5 **பயணத்திற்கு முன் வாகனம் சரியான நிலையில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.**	• பயணம் தொடங்கும் முன், வாகன ஆய்வு (Pre-Trip Inspection) முழுமையாக செய்யப்பட்டுள்ளது. • வாகனம்: – நல்ல நிலையில் செயல்படுகிறது. – இந்த பயணத்திற்கு தகுதியானதாக உள்ளது. – எதிர்பார்க்கப்படும் வானிலை, சாலை நிலைமை மற்றும் அவசரகால தேவைகளுக்கான உபகரணங்களுடன் உள்ளது. • வாகனத்தை நகர்த்தும் முன், 360° சுற்றி ஆய்வு செய்து, எந்த ஆபத்தும் இல்லையென உறுதிப்படுத்தவும்.		

6	**பயணத்திற்கு முன், வாகனத்தின் உள்ளேயும் வெளியேயும் உள்ள அனைத்து பொருட்களும் பாதுகாப்பாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன.**	• சுமைகளை பாதுகாப்பாக வைத்திருக்க தேவையான பாதுகாப்பு அல்லது கட்டுப்பாட்டு அமைப்புகள் (Restraint Systems) பொருத்தப்பட்டு, சரியாக செயல்படுகின்றன. • கருவிகள், உபகரணங்கள் மற்றும் தளர்வாக உள்ள பிற பொருட்கள் வாகனத்தின் உள்ளேயும் வெளியேயும் அகற்றப்பட்டுள்ளன அல்லது பாதுகாப்பாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன (எ.கா., கருவிப் பெட்டி அல்லது சரக்கு வலை மூலம்). • தேவைப்பட்டால், சுமை பாதுகாப்பு சரிபார்ப்பு பட்டியல் (Load Securement Checklist) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.		
7	**வாகனத்தில் பயணம் செய்த அனைத்து நபர்களும் தங்கள் சீட் பெல்ட்களைப் பயன்படுத்துகிறார்கள்**	• பாதுகாப்புப் பட்டைகள் நல்ல நிலையில் இருந்து, சரியான முறையில் அணியப்பட்டுள்ளன (எ.கா., மூன்று-புள்ளி பாதுகாப்புப் பட்டை (Three-Point Seatbelt)).		
8	**வாகனம் ஓட்டும் போது கவனச்சிதறலைத் தவிர்க்க அல்லது குறைக்க தேவையான திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**	• ஓட்டுநர், வாகனம் ஓட்டும் போது தொலைபேசி அல்லது மொபைல் சாதனங்களை பயன்படுத்த மாட்டார். – வரும் அழைப்புகள் (Calls) ஓட்டும் நேரத்தில் வேறு வழிக்குத் திருப்பிவிடப்படும். – தொலைபேசி அல்லது மொபைல் சாதனங்களை பயன்படுத்த வேண்டுமானால், ஓட்டுநர் பாதுகாப்பான இடத்தில் வாகனத்தை நிறுத்தி பயன்படுத்துவார். • டிஜிட்டல் வழிகாட்டி சாதனங்கள் (GPS/Navigation System) பயணம் தொடங்கும் முன்பே அமைக்கப்பட்டுள்ளன.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

